

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதுச்சேரி மாநிலத்திற்கு வழங்கிய புயல் நிவாரணப் பொருட்களை பாகூர் தொகுதியைச் சேர்ந்த 600 குடும்பங்களுக்குச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார்.

### கோவை - சென்னை - மதுரையில்

# ரூ.26 கோடி மதிப்பீட்டில் 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதிகள்!

## பேரவையில் அமைச்சர் கீதா ஜீவன் தகவல்!

சென்னை, டிச.11-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர்கேள்விக்குபதிலளிக்கையில் அமைச்சர் கீதா ஜீவன் கோவை, சென்னை, மதுரையில் 'தோழி பணிபுரியும், மகளிர் விடுதிகள் அமைக்கப் பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இது குறித்து விவாதம் வருமாறு:

**வி.பி.கந்தசாமி:** சூலூர் தொகுதியில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் பி. கீதா ஜீவன் :** முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி தோழி தங்கும்விடுதிகள், முன்னேறும்மகளிரின்முகவரிஎன்ற அடையாளத்துடன், பாதுகாக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன், தமிழகமெங்கும் மகளிர் விடுதிகள் நிறுவப்பட்டு, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. கோயம்புத்தூரில் பூமார்க்கெட்பகுதியில்அரசு பணிபுரியும் மகளிர் விடுதி 2013 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

இவ்விடுதியில் 50 படுக்கை வசதிகள் இருக்கின்றன. தற்போது 14 பணிபுரியும் மகளிர்கள் தங்கி பயனடைந்து வருகின்றனர். மேலும், இவ்விடுதியில் மேம்படுத்தப்பட்ட வசதியினைஅளித்து, மறுசீரமைப்பு செய்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல் கோயம்புத்தூர்கவுண்டம் பாளையம்பகுதியில்மறுசீ



ரமைக்கப்பட்ட விடுதியான, தோழிதங்கும்விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது. இதைத்தவிர கோயம்புத்தூரில் மற்றொரு பணிபுரியும் மகளிர் விடுதி கட்டுவதற்கு...

2024-2025 ஆம் ஆண்டு நிதிநிலைஅறிக்கையில்நம்முடைய முதலமைச்சர் அவர்களால் நிதி யொதுக்கப்பட்டு, 200படுக்கைகள் கொண்ட மகளிர் விடுதி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மொத்தம் 266தனியார் பணிபுரியும் மகளிர் விடுதிகள்செயல்பட்டுவருகின்றன. அதில் சூலூர் தொகுதியில் 15 தனியார் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட விடுதிகளில் பணிபுரியும்மகளிர்பயனடைந்து வருகிறார்கள். ஆகவே, நம்முடைய சூலூர் தொகுதியின் தேவையறிந்து, அரசு, சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, தமிழ்நாடு பணிபுரியும்மகளிர்விடுதிகள்நிறுவனம்மூலம் 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதி அமைத்திட அரசு பரிசீலிக்கும் என்பதைக் கூறி அமர்கிறேன்.

**வி.பி.கந்தசாமி:** என்னுடைய சூலூர் தொகுதிக்கு பணிபுரியும்மகளிருக்கான விடுதி அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் பி. கீதா ஜீவன் :** சூலூர் தொகுதியில் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, பணிபுரியும் மகளிர் நிறுவனத்திற்கான இடத்தினைத் தேர்வு செய்து, நிச்சயமாக, மகளிருக்கான விடுதி அமைப்பதற்கான உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**வி.பி.கந்தசாமி:** நம்முடைய அரசின் மூலமாக, சமூக நலத் துறையின் சார்பாக, பல இடங்களில் கோவை மாவட்டத்தில் மூன்றுஇடங்களில்மகளிர் தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்களிடத்தில் கட்டணமாக எவ்வளவு தொகைவசூலிக்கப்படு கிறது, அவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**அமைச்சர் பி. கீதா ஜீவன்:** 2024-2025ஆம்ஆண்டுநிதிநிலை அறிக்கையிலே கோயம்புத்தூர், சென்னை, மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் சேர்ந்து 26 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல, இந்த 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதிகளில், biometric நுழைவு, அதாவது, அவரவர்கள், விரல் ரேகை வைத்தால்தான் உள்ளே நுழைய முடியும். கண்காணிப்பு கேமரா, 24மணிநேரமும்பாதுகாப்புவசதிகள் செய்யப்பட்டுள்ளன. Wifi வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், இணையதளத்தின்மூலம் முன்பதிவு, நம்முடையஊரிலிருந்தே, நம் கிளம்பி வரும் முன்னரே முன்பதிவு செய்து கொள்ளலாம். அதுபோல், கொதிநீர்கலன் வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ளது. தினசரி அறை பராமரிப்பு மற்றும் சலவை இயந்திரம், வாகனநிறுத்துமிடம், அவர்களுக்காகவே அவர்கள் சமைத்துக்கொள்ள விரும்பினாலும் அதற்கும் வசதி அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல், அவர்கள் குழந்தைகளுடனும் அதிலே பெண்கள் தங்கிக் கொள்ளலாம். மாத வாடகை மட்டுமல்லாது, ஒரு நாள், இரண்டு நாள் என்ற வாடகையிலும் அவர்கள் தங்கிக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பணிபுரியும் மகளிர் மட்டுமல்லாது, அரசு நுழைவுத் தேர்வுகள் மற்றும் ஏதேனும் நேர்காணலுக்காக வரக்கூடிய பெண்கள்கூட இதனைப் பயன்படுத்திக்கொள்ளும் விதமாக அத்துணை வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

சென்னையைப் பொறுத்தவரை ஒரு தனி நபருக்கானமாதவாடகை ரூ.6500. இருவர் பங்கிட்டுக் கொள்ளும் அறையெனில் ரூ.5400, நால்வர் பங்கிட்டுக் கொள்ளும் அறையெனில் ரூ.4500, ஆறுபேர் பங்கிட்டுக் கொள்ளும் அறையெனில் ரூ.4000மாதவாடகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### இந்தியாவிலேயே குடிமைப் பொருட்கள் வழங்குவதில்

# தமிழ்நாடுதான் சிறப்பாக செயல்பட்டு வருகிறது!

## சட்டப்பேரவையில் உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பெருமிதம்!


சென்னை, டிச.11-

இந்தியாவிலேயே குடிமைப் பொருட்கள் வழங்குவதில் தமிழ்நாடு தான் சிறப்பாகசெயல்பட்டுவருகிறது என்று பேரவையில் கேள்வி நேரத்தில் உறுப்பினரின்கேள்விக்குபதிலளிக்கையில்அமைச்சர்கே.ஆர். பெரியகருப்பன் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

**பெ.பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** மேலூர் தொகுதி, கம்பூர் ஊராட்சி, சின்ன கற்பூரம்பட்டிகிராமத்திற்குப் பகுதிநேர நியாய விலைக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன்:** மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி கம்பூர் ஊராட்சிக்குட்பட்ட ஏ 3098 கேசம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பெரியகற்பூரம் பட்டி முழு நேர நியாயவிலைக் கடையிலிருந்துபுதியபகுதிநேரநியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** சின்ன கற்பூரம் பட்டி, கோவில்பட்டி, பெருமாக்கிபுதூர் ஆகிய கிராமங்களிலுள்ள மக்களின்நலன் கருதி சின்னகற்பூரம்பட்டிபகுதியில்பகுதி நேர நியாய நிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.



**அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன்:** ஏ3098 கேசம் பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் கட்டுபாட்டின்கீழ், பெரிய கற்பூரம் பட்டி முழுநேர நியாயவிலைக் கடை 567 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. சின்ன கற்பூரம்பட்டி கிராமத்தில் 282 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை பிரிக்கப்பட்ட பின்னர், தாய் கடையில்285குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். மேலும், தாய் கடைக்கும், புதியபகுதிநேரநியாய விலைக் கடைக் கோரும் சின்ன கற்பூரம்பட்டி கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம்½கி.மீ.தான். எனவே, அரசுஆணையின்படி, தாய் கடைக்கும்புதியபகுதிநேர கடைக்கும் இடையே 1.5 கி.மீ. தூரமும், பகுதிநேர கடை பிரிக்கப்பட்ட பின், தாய் கடையில் குறைந்த பட்சம் 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும். இந்த இரண்டு நிபந்தனை களையும் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தால் சின்ன கற்பூரம்பட்டியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வழிவகை இல்லை.

**பெ.பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** மேலூர் தொகுதியில் நரசிங்கம்பட்டி ஊராட்சியில் களிங்கம் பட்டி, பெருமாள்பட்டி, சின்ன பெருமாள்பட்டி, TVS காலனி ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் பயன் பெறும்வகையில் பெருமாள்பட்டியில் ஒரு பகுதிநேர நியாய நிலைக் கடையும், கீழவளவு ஊராட்சி குளிச்செவல் பட்டி கிராமத்திற்கும், மணப்பச்சேரி ஊராட்சி, காரியண்டல்பட்டி கிராமத்திற்கும், கிடாரிப்பட்டி ஊராட்சி தேர்குண்டம் பட்டி கிராமத்திற்கும், கொங்கம்பட்டி ஊராட்சி பன்னிவீரன்பட்டிகிராமத்திற்கும், தமிழக அரசு நிபந்தனை களை தளர்த்து பகுதிநேரநியாயநிலைக்கடை அமைக்கஅரசுஆவனசெய்யுமா?

**அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன்** இந்தியாவில்இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களிலும்தமிழகம்தான் குடிமைப் பொருட்கள் வழங்குவதில், குறிப்பாக மக்களுக்குஎந்தவிதஇடையூறும் இல்லாத அளவில், சுலபமாக மக்கள் சென்று வாங்கக்கூடிய அளவிற்கு வழிவகைசெய்திருக்கிறது. மேலும், முதலமைச்சர் அவர்கள், மக்களுடைய நலனில் அக்கறையோடு, இந்தத் திட்டத்தை சிறப்பாக செய்திட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில், மொத்தம் 34,793 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. இதில்26,347முழு நேர நியாயலைக் கடைகளும், 8,446 பகுதிநேர நியாயநிலைக்கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, இதுபோன்றமக்கள் பிரதிநிதிகளுடையகோரிக்கைகளை ஏற்று, 544 புதிய முழுநேர நியாயவிலைக் கடை களும், 1,126 பகுதி நேர நியாயவிலைக் கடைகளும் திறக்கப்பட்டு, இது வரையில் 3 ½ ஆண்டு காலத்தில் மொத்தம் 1,670 நியாய விலைக் கடைகள் புதிதாக துவங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதிகளில் தேவை ஏற்படின் அவற்றை உரிய முறையில் ஆய்வு செய்து, நிச்சயமாக பொதுமக்களுக்கு நன்மை பயக்கின்ற காரியங்களை இந்த அரசு நடத்தித் தரும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### பல்வேறு பணிகளில்

# ஐக்கிய அரபு அமீரகத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை!

## விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு - அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் அறிவிப்பு!

சென்னை, டிச.11-

ஐக்கியஅரபுஅமீரகத்தில் பணிபுரிய Welder, Piping Fabricator, Piping Fitter, Structure Fabricator, Structure Fitter, Millwright Fitter, Grinder/Gas cutter மற்றும் Piping Foreman ஆகிய பணிகளுக்கான ஆட்கள் தேவைப்படுகிறார்கள் எனவும், விருப்பம்உள்ளவர்கள் உடனடியாகவிண்ணப்பிக்கலாம் எனவும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

ஐக்கியஅரபுஅமீரகத்தில் பணிபுரிய Welder (CS GTAW +SMAW, SSGTAW +SMAW, CS & SS GTAW+SMAW, Alloy (P92 & p91)-GTAW+SMAW, Duplex & SuperDuplex GTAW+SMAW), Piping Fabricator, Piping Fitter, Structure Fabricator, Structure Fitter, Millwright Fitter, Grinder (AG4&AG7)/Gascutter மற்றும் Piping Foreman தேவைப்படுகிறார்கள்.

ஐக்கியஅரபுஅமீரகத்தில் பணிபுரிய குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று 3 வருட பணி அனுபவத்துடன் 44 வயதுக்கு உட்பட்ட Welder பணிக்கு ரூ. 40,000/ முதல் ரூ. 78,000/ வரை, Piping Fabricator ரூ. 40,000/ முதல் ரூ. 51,000/ வரை Piping Fitter ரூ. 36,000/ முதல் ரூ. 42,000/ வரை Structure Fabricator ரூ.42,000/ முதல் ரூ.51,000/ வரை Structure Fitter ரூ. 36,000/ முதல் ரூ.42,000/ வரை Millwright Fitter ரூ.42,000/ முதல் ரூ.51,000/ வரை Grinder/Gas cutter ரூ.30,000/ முதல் ரூ.32,000/ வரை மற்றும் Piping Fireman ரூ.53,000/ முதல் ரூ. 60,000/ வரை மாத ஊதியமாக வழங்கப்படும். மேலும் உணவு மற்றும் இருப்பிடம், வேலை அளிப்பவரால் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணிக்கு செல்பவர்கள்விசா கிடைத்தப்பின்னர் இந்நிறுவனத்திற்கு சேவைக்கட்டணமாக ரூ. 35,400/ மட்டும் செலுத்தினால் போதும்.

மேலே குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு செல்லவிருப்பமுள்ள ஆண்பணியாளர்கள் www.omcmanpower.tn.gov.in என்ற இந்நிறுவன இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் ovemclnm@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு தங்களின் சுய விவர விண்ணப்பபடிவம், கல்வி, பணி அனுபவ சான்றிதழ் மற்றும் பாஸ்போர்ட் (Passport) நகலினை 25.12.2024 தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் விவரங்களுக்கு அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவன தொலைபேசி எண் 044-22502267 மற்றும் Whatsapp எண் 95662 39685 வாயிலாக அறிந்து கொள்ளலாம்

இவ்வாறு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத் தலைவர் (ம) நிர்வாக இயக்குநர் அறிவித்துள்ளார்.

### எழும்பூர் தொகுதி புல்லாபுரம்- சாஸ்திரி நகர் - போகிப்பாளையம் பகுதிகளில்

# புதைவட மின் கம்பிகள் அமைத்திடுக!

## பேரவையில் எழும்பூர் இ.பரந்தாமன் கோரிக்கை!

சென்னை, டிச.11-

எழும்பூர் தொகுதி 77வது வார்டு, புல்லாபுரம், சாஸ்திரி நகர், போகிப்பாளையம் பகுதியில் புதைவட மின் கம்பிகளை அமைத்திட வேண்டும் என்று எழும்பூர் தொகுதி உறுப்பினர் இ.பரந்தாமன் கேள்வி நேரத்தின் போது வலியுறுத்தினார்.

இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**இ. பரந்தாமன்:** எழும்பூர் சட்டப்பேரவைத் தொகுதியில் புல்லாபுரம், சாஸ்திரி நகர் மற்றும் வார்டு எண் 77ல் இருக்கக்கூடிய போகிப்பாளையம் ஆகிய பகுதிகளில் போதிய புதைவட மின் கம்பிகள் கேபிள் இல்லாத காரணத்தால் பில்லரில் இருந்து ஒயரை ஒவ்வொரு வீட்டிற்கும் connection கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் இதுபோன்று பில்லரில் இருந்து ஒயர் நேரடியாகப் போவது என்பது ஆபத்தை விளை விக்கக்கூடியதாக இருக்கிறது. எனவே, நான் குறிப்பிட்டிருக்கக்கூடிய புல்லாபுரம், சாஸ்திரி நகர் மற்றும் போகிப்பாளையம் பகுதிகளில் இருக்கக்கூடிய பில்லரில் இருந்து வீடுகளுக்குப்போகிற ஒயர்களுக்குப் பதிலாக கேபிள் பதிய வைத்துத் தருமாறு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் செந்தில் பாலாஜி:** இன்று மாலையே உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டிய பகுதிகளுக்கு துறையினுடைய அலுவலர்களை அனுப்பி அந்தப் பணிகள் மாற்றி அமைக்கப்படும் என்பதை பேரவை தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



தேனி வடக்கு மாவட்டப் பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் முத்துக்குமார் ஏற்பாட்டில் கழக மாநில இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தென் மாநில அளவிலான இறகுப் பந்துப் போட்டியை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கத்தமிழ்செல்வன் எம்.பி., துவக்கி வைத்தார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட நிர்வாகிகள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### பெரம்பூர் தொகுதி மண்டலம் - 4-இல் கந்தாஸ் நகரில்

# 110 கி.வோ. துணை மின் நிலையம் விரைந்து அமைத்திட வேண்டும்!

## பேரவையில் - பெரம்பூர் ஆர்.டி.சேகர் கோரிக்கை!

சென்னை, டிச.11-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பெரம்பூர் தொகுதி உறுப்பினர் ஆர்.டி.சேகர் பெரம்பூர் தொகுதி கந்தாஸ் நகரில் 110 கி.வோ துணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைந்து நிறைவேற்றிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து பேரவை



யில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஆர்.டி.சேகர்:** முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, பெரம்பூர் தொகுதி, மண்டலம் 4ல் கந்தாஸ் நகரில் 110 kv துணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைந்து நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் எடுத்துக்கொள்ளப்பட்ட துணை மின் நிலையங்கள் தொடர்பான பணிகள், தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரக்கூடிய நிலையில் இருக்கின்றன. விரைவாக அந்தப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



குடியாத்தம் கழக முன்னோடி மா.உதயன் என்கிற உதய சூரியன் படத்திறப்பு நிகழ்ச்சியில் அமுலு விஜயன் எம்.எல்.ஏ. நகரச் செயலாளர் எஸ். சௌந்தரராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.